

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.10.2024) சென்னை, பெசன்ட் நகர் கடற்கரை மணல் பரப்பில் ரூ.1.61 கோடி மதிப்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு, மரப்பலகைகளை கொண்டு அணுகு பாதை அமைக்கும் பணியினை ஆய்வு செய்தபோது, மாற்றுத்திறனாளிகளை சந்தித்து அவர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தார். இந்த ஆய்வின்போது, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



என் உயிரினும் மேலான... இறுதி கட்ட பேச்சுப் போட்டியில் பங்கேற்ற 182 இளம் பேச்சாளர்களும் 26.10.2024 அன்று பேருந்துகள் மூலமாக சென்னை மெரினா கடற்கரையில் அமைந்திருக்கும் பேறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் நினைவிடங்களை பார்வையிட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இளம் பேச்சாளர்களுக்கு வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொண்டார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.10.2024) அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில்,என் உயிரினும் மேலான... கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டியில் பங்கேற்ற இளம் பேச்சாளர்களுடன் மதிய உணவு அருந்தினார். உடன் கழக இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



நவீன தமிழ்நாட்டின் சிற்பி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு மற்றும் கழக பவள விழா ஆண்டின் நிறைவை முன்னிட்டு, திருவல்லிக்கேணி – சேப்பாக்கம் தொகுதி மக்களுக்கு தொடர்ந்து நலத்திட்ட உதவிகளை வழங்கி வரும் வகையில், சேப்பாக்கம் பகுதி, 63அ வட்டம், நைனியப்பன் தெரு பகுதி மக்கள் 1000 பேருக்கு நலத்திட்ட உதவிகளை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். உடன் எஸ்.மதன்மோகன் உள்ளார்.



கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் கழக பவள விழா ஆண்டை முன்னிட்டு, சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதி, சேப்பாக்கம் பகுதி, 62ஆவது வட்டம், ஐயா தெரு சாமி தெரு பகுதி மக்கள் 1000 பேருக்கு நலத்திட்ட உதவிகளை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

## திராவிட இயக்கத்தின் அடுத்த தலைமுறைப் பேச்சாளர்களாக வருகை தந்துள்ள உங்களை –

# கழகத் தலைவரின் கரங்களில் ஒப்படைப்பதில் இளைஞர் அணி மிகுந்த பெருமை கொள்கிறது!

### ‘என் உயிரினும் மேலான’ பேச்சுப் போட்டி பரிசளிப்பு விழாவில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை,அக்.29-**

**“திராவிட இயக்கத்தின் அடுத்த தலைமுறைப் பேச்சாளர்களாக வருகை தந்துள்ள உங்களை முதலமைச்சரும் – கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களிடம் ஒப்படைப்பதில் இளைஞர் அணி பெருமை கொள்கிறது” என்று கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கூறினார்.**

முதலமைச்சரும், திராவிட முன்னேற்ற கழக தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (27.10.2024) அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி நடத்தப்பட்ட “என் உயிரினும் மேலான....” மாநில அளவிலான பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கி, இளைஞரணியின் முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் சார்பில் ஒன்பது நூல்களை வெளியிட்டுச் சிறப்பித்த நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:

முத்தமிழறிஞர் கலைஞருடைய நூற்றாண்டை முன்னிட்டு, கழகத்துடைய இளைஞரணி நடத்திய என் உயிரினும் மேலான பேச்சுப் போட்டியில் தேர்வான இளம் பேச்சாளர்களை கழகத்திடம் ஒப்படைக்கின்ற ஒரு சிறப்பான பெருமை வாய்ந்த நிகழ்ச்சி. முதல் மூன்று பேச்சாளர்களுக்கு பரிசளிப்பு விழா, முத்தமிழறிஞர் பதிப்பகத்தினுடைய ஒன்பது நூல்களை வெளியிட்டு, சிறப்புரையாற்ற வருகை தந்துள்ள கழகத்துடைய தலைவர் இந்தியாவுடைய நம்பர் ஒன் முதலமைச்சர் அவர்களே,

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களால் உருவாக்கப்பட்ட நம்முடைய கழக இளைஞரணியின் வரலாற்றில் இன்று மிக, மிக முக்கியமான மறக்க முடியாத ஒரு நாள். முத்தமிழறிஞர் கலைஞருடைய நூற்றாண்டினை முன்னிட்டு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கழகத்தின் ஒவ்வொரு அணிக்கும், பல்வேறு பணிகளை மேற்கொள்ள கட்டளையிட்டார்கள். அந்த வகையில இளைஞரணிக்கு சட்டமன்ற தொகுதிகள்தோறும், 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் கலைஞர் நூற்றாண்டு நூலகம் திறக்க வேண்டும். அதுமட்டுமல்ல. என் உயிரினும் மேலான எனும் பேச்சுப் ப்போட்டியை நடத்த வேண்டும். என்று கட்டளையிட்டார்கள். இதுவரை கலைஞர் நூலகங்கள் தமிழ்நாடு முழுவதும் 75 தொகுதிகளில்திறக்கப்பட்டுள்ளன. இன்னும்3 மாதங்களுக்குள் மீதமுள்ள அனைத்து தொகுதிகளிலும் கலைஞர் நூலகங்களை திறந்து விடுவோம் என்ற உறுதியை இந்த நேரத்தில் தலைவர் அவர்களுக்கு உறுதியளிக்கின்றேன்.

### மெய்மறந்து ரசித்தேன்!

அடுத்து கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி, இந்த பணியை ஏதோ நடத்தினோம், பரிசுத் தொகை கொடுத்தோம்னு அப்படின்னு இல்லாம, இந்த இயக்கத்திற்கு பயனுள்ள வகையில் நடத்தவேண்டுமென்று நம்முடைய தலைவர் அவர்கள் அன்பு கட்டளையிட்டார்கள். நம்முடைய முதலமைச்சர் என்ன எதிர்பார்த்தார்களோ, அதை முழுமையாக நிறைவேற்றித்தரும் வகையில் இந்த பேச்சுப்போட்டியை நடத்தியிருக்கிறோம் என்று முழுமையாக நம்புகின்றோம்.

அதற்கு இங்கு இருக்கக்கூடிய பேச்சாளர்களும், அவர்களுடைய பேச்சாற்றலுமே ஒரு சிறந்த எடுத்துக் காட்டு. இந்த பேச்சுப் போட்டிக்கான அறிவிப்பு வெளியானபோது மாவட்ட அளவிலான போட்டிகளில் பங்கேற்பதற்காக17,000பேர்விண்ணப்பிச்சிருந்தாங்க. மொத்தம் 47 இடங்களில் மாவட்ட அளவிலான பேச்சுப் போட்டிகளை நடத்தினோம். இந்த பேச்சுப்போட்டிக்காக 10 தலைப்பு கள் வழங்கப்பட்டு இளைஞரணி சார்பில 85 நடுவர்கள் நியமிக்கப்பட்டு, மாவட்டங்களுக்கு அனுப்ப ப்பட்டார்கள். சென்னையில் நடந்த மாவட்ட, மண்டல, மற்றும் இறுதிப்போட்டி களை நானே நேரில் போய் பார்த்தேன். உங்களுடைய பேச்சைக் கேட்டு நான் மெய்மற ந்து ரசித்தேன். உண்மையிலே யே நீங்க அத்தனைபேரும் மிகவும் சிறப்பாக பேசியிருக்கிறீ ர்கள்.



நீங்க பேசறத கேட்கும்போது எனக்கு அவ்வளவு மகிழ்ச்சியா இருந்தது. நம்முடைய திராவிட இயக்கத்தை யாராலும் வீழ்த்த முடியாது என்கிற மிகப்பெரிய ஒரு நம்பிக்கை எனக்கு வந்துவிட்டது. சரியான வேலையை செஞ்சு, சரியான பேச்சாளர்களை கண்டுபிடிச்சு தலைவர்கிட்ட ஒப்படைச்சிருக்கோம்ங்கற மனநிறைவும், பெருமிதமும் எனக்கு இப்ப ஏற்பட்டிருக்கு.

### மாவட்டச் செயலாளர்கள் ஊக்கப்படுத்தினார்கள்!

அதேபோல் நம்முடைய மாநில துணைச் செயலாளர்களும், அவங்களோட மண்டலங்களில் பேச்சுப் போட்டிகளை மிகச் சிறப்பாகவும், ஒருங்கிணைத்தார்கள். மாவட்ட கழகத்தோட சேர்ந்து மாவட்ட அமைப்பாளர்களும், துணை அமைப்பாளர்களும் மிகச் சிறப்பாக ஏற்பாடுகளை செய்தார்கள். மாவட்ட அளவிலான போட்டிகளில் கலந்து கிட்ட 17,000 பேர்களில் இருந்து 913 பேர பில்டர் பண்ணி அவர்களை மண்டல அளவிலான போட்டியில் பங்கேற்க செய்தோம். அந்த 913 பேருக்கும் தலா ரூ.10,000 ஊக்கத் தொகையை தாங்களாகவே முன்வந்து, நம்முடைய மாவட்ட கழகச் செயலாளர்கள் வழங்கி, அவர்களை கவுரவப்படுத்தி, ஊக்கப்படுத்தினார்கள். மண்டல அளவில பங்கேற்கின்ற போட்டியாளர்களுக்கு நாம ஐந்து தலைப்புகள் கொடுத்தோம்.

### முதல் மூன்று பரிசுகளை பெற்றவர்கள்!

இந்த 913 பேரை நல்ல அளவுல பட்டை தீட்டணும்னு நடுவர்கள் பயிற்சி கொடுத்தாங்க. குறிப்பாக போட்டியாளர்கள் தங்கள தயார் செய்து கொள்ள மெட்டீரியல்ஸ் கொடுக்கறது, புத்தகங்களை ரெபர் பண்றது, பேசுவதற்கான கன்டென்ட்டை கரெக்ட் பண்ணி கொடுக்கறதுன்னு. பல நல்ல பணிகளை நடுவர்கள் செய்தார்கள். இந்த மண்டல அளவிலான போட்டிகளில் 913 பேர்ல இருந்து 182 சிறந்த பேச்சாளர்களை நம்முடைய நடுவர்கள் அடையாளங் கண்டு, நம்ம கிட்ட ஒப்படைத்தார்கள். மாநில அளவிலான போட்டிக்கு தேர்வானவர்களை 2 பிரிவா பிரிச்சு நேற்று முன்தினம் அன்பகத்தில, 91 பேர், அதேபோல் தியாகராயர் அரங்கத்துல 91 பேர்னு அவங்களுக்கான இறுதிப்போட்டிகள் நேற்று முன்தினம் நடைபெற்றன. அந்த பேச்சுப் போட்டிகளில் பங்கேற்ற அனைவருமே வெற்றியாளர்கள்தான்.

ஆனால் 3 பேருக்குத்தான் பரிசு கொடுக்க முடியும். எனவே இன்றைக்கு அந்த மூன்று பரிசுகளை பிடித்த நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த சகோதரர் ம.மோகநிதி அவர்களுக்கும், செங்கல்பட்டு மாவட்டத்தை சேர்ந்த சகோதரி ம.சிவரஞ்சனி அவர்களுக்கும், தஞ்சாவூர் மாவட்டத்தை சேர்ந்த சகோதரி ஜோ.வியானி விஷ்வா அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்களை, இளைஞரணியினுடைய வாழ்த்துகளை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### பெண்கள் அதிக அளவில் பங்கேற்பு!

இந்த மூன்று பேருக்கும் இளைஞரணியினுடைய தாயாக திகழ்கின்ற நம்முடைய திராவிட மாடல் நாயகர் முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு பரிசுகளை வழங்க வழங்க இருக்கிறார். இப்படி மிகப்பெரிய உழைப்போட இந்த போட்டியை நடத்தியிருக்கிறோம். குறிப்பாக இந்த இறுதிப்போட்டிக்கு பல்வேறு மாவட்டங்களில் இருந்து வந்திருக்கறீங்க. அவங்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும், நம்முடைய இளைஞரணி சார்பில செஞ்சு கொடுத்திருக்கிறோம். இந்த போட்டியை பொறுத்தவரைக்கும் என்ன சிறப்பு என்றால், ஆண்களை விட பெண்கள்தான் அதிக அளவில் பங்கேற்று உள்ளார்கள். அதற்கு அந்த சகோதரிகளுக்கு என்னோட வாழ்த்துகளையும் நன்றியையும் தெரிவிச்சிக்கிறேன். அவங்களுக்கு மட்டுமல்ல, அவர்களுடைய பெற்றோர்களுக்கும், என்னோட நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் மீது நம்பிக்கை வைத்து இந்த போட்டிக்கு அனுப்பி வைத்த உங்களுக்கு என்னுடைய நன்றி. வெளியூர்ல போட்டி நடக்குது அப்படின்னா, சில பேர், தங்களுடைய பெண் குழந்தைகளை அனுப்புவதற்கு தயங்குவார்கள்.

இங்கே இவ்வளவு பெண்கள் பங்கேற்று இருக்காங்க அப்படின்னா, அதுக்கு பெற்றோர்களோட சப்போர்ட், அவர்கள் உங்கள் மீது வைத்திருக்கக் கூடிய நம்பிக்கைதான் முக்கிய காரணம். அந்த நம்பிக்கையை நீங்கள் காப்பாற்றி இருக்கின்றீர்கள்.

இந்தப் பேச்சுப்போட்டியின் வெற்றியின் காரணத்தால, கழகத்தலைவர், முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று, இனி வருகின்ற ஒவ்வொரு வருடமும் கலைஞர் நூற்றாண்டு ”என் உயிரினும் மேலான” பேச்சுப்போட்டியை நடத்த தலைவர் அவர்கள் அனுமதிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன். .

### மின்னலாக ஒலிக்கும் பொதுச் செயலாளர்!

இந்தப் பேச்சுப் போட்டியை நடத்துவதற்கு எங்களை எல்லா கட்டங்களிலும் உற்சாகப்படுத்தி ஊக்குவித்த முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் இளைஞரணி சார்பில மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதே போல நம்முடைய கழக பொதுச்செயலாளர் இங்கே வந்து இருக்கிறார். சட்டமன்றத்தின் இடி, மின்னல், மழை, என்று நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் போற்றுவார்கள். அதில் மின்னலாய் திகழ்ந்தவர்தான் நம்முடைய அமைச்சர் மாமா துரைமுருகன் அவர்கள்.. அன்றைக்கு மட்டுமல்ல இன்றைக்கும் சட்டமன்றமாக இருந்தாலும் சரி, கழக நிகழ்ச்சிகளாக இருந்தாலும் சரி. ‘மின்னலாக’ ஒலிக்கும், துரைமுருகன் மாமாவை போல, இங்கே இருக்கும் போட்டியாளர்கள், அனைவரும் தலைசிறந்த பேச்சாளர்களாக இடி, மின்னல், மழையாக நீங்கள் உருவாக வேண்டும் என்பதே எங்கள் ஒரே நோக்கம்.

இளைஞரணினுடைய ஒவ்வொரு பணியையும் முதலமைச்சர் அவர்கள், பார்த்து, பார்த்து, எங்களுக்கு வழிகாட்டி வருகிறார்கள். தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி 234 சட்டமன்ற தொகுதிகளிலும் திராவிட இயக்க பயிற்சி பாசறைக் கூட்டங்களை சென்ற வருடம் நடத்தி முடித்தோம். அதேபோல் முரசொலி பாசறை பக்கத்தையும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான் தொடங்கி வைத்தார்.

அதுமட்டுமில்ல, இளைஞரணி மூலமாக முத்தமிழறிஞர் பதிப்பகத்தை, தொடங்கி அந்த பதிப்பகத்தின் மூலம் 9 நூல்களையும் நம் முதலமைச்சர் அவர்கள்தான் வெளியிட்டாங்க. அதன் இரண்டாவது கட்டமாக இன்றைக்கு 9 புதிய நூல்களை வெளியிட இருக்கிறார்கள். .நூல்களை பெற்றுக்கொள்ள வருகை தந்துள்ள பொதுச்செயலாளர் அவர்களுக்கு நான் மீண்டும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோல் நூல் ஆசிரியர் அக்கா அருள்மொழி அவர்களுக்கும், அண்ணன் சுபகுணராஜன் அவர்களுக்கும், அண்ணன் கோ.வி.லெனின் அவர்களுக்கும், நீரை மகேந்திரன் அவர்களுக்கும், பிரகாஷ் அவர்களுக்கும், வினோத்குமார் அவர்களுக்கும், ஓவியர் சொக்கலிங்கம் அவர்களுக்கும் மீண்டும் என்னுடைய வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இப்படி இளைஞரணியை தொடர்ந்து ஊக்குவித்து பல்வேறு வகையிலும், முதலமைச்சர் அவர்கள் துணைநின்று வருகிறார்கள். கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி மூலமாக, இன்றைக்கு தேர்வாகி வந்திருக்க அத்தனை பேருக்கும் என்னோட வாழ்த்துகளை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டின் திராவிட இயக்கத்தின் அடுத்த தலைமுறை பேச்சாளர்களாக வந்திருக்கின்ற, உங்களை நம்முடைய முதலமைச்சர் அவர்களின் கரங்களில் ஒப்படைக்கிறதுல இளைஞரணி மிகுந்த பெருமை கொள்கின்றது, மகிழ்ச்சி அடைகின்றது.

இனி, நீங்க எப்போதும் எங்க கூட இணைஞ்சு பயணம் செய்ய போறீங்க. உங்களுக்கு எல்லா வகையிலும் நம்முடைய இளைஞரணி எப்போதுமே துணை இருக்கும். பொதுவாக தலைமைக்கழக பேச்சாளர்களை மாநில கொள்கை பரப்புக்குழுதான் ஒருங்கிணைப்பாங்க. எந்த நிகழ்ச்சிக்கு எந்த பேச்சாளரை அனுப்பணும்னு அவங்கதான் முடிவு செய்வாங்க. இந்த நேரத்தில், ஒரு சிறு கோரிக்கையை மட்டும் முன் வைக்க விரும்புறேன்.

இனிமேல் தலைமைக்கழகத்திற்கும் மாநில கொள்கை பரப்பு குழுவுக்கும் ஒரு கோரிக்கை. அதாவது இந்த பரிசளிப்பு விழாவோட இந்த நிகழ்ச்சி முடிவடையாது. இந்த 182 பேரையும் மாவட்ட கழக செயலாளர்கள் சிறப்பாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

இவர்களுக்கு நீங்கள் தொடர்ந்து பேசுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன். இந்த பேச்சுப் போட்டி இவ்வளவு சிறப்பா நடந்ததுன்னா, மாவட்டக்கழகச் செயலாளர்களோட ஒத்துழைப்பு மிக, மிக அவசியம் முக்கியம். அவர்களுக்கு மீண்டும், மீண்டும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நேரத்துல, கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டிக்கு துணை நின்ற தலைமைக் கழகத்தினர், மாவட்டக்கழகச் செயலாளர்கள், இளைஞரணி மாநில துணைச் செயலாளர்களுக்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அதே போல, மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்னு அத்தனை இளைஞரணி நிர்வாகிகளுக்கும் என்னோட வாழ்த்துகள், பாராட்டுகளை தெரிவிச்சுக்குறேன்.

இந்த பேச்சுப்போடியின் வெற்றிக்கு எங்களுடன் இணைந்து பயணித்த அத்தனை நடுவர்களுக்கும் என்னுடைய நன்றியை தெரிவிச்சுக்குறேன். உங்களோட பணியை என்றைக்கும் இளைஞரணி மறக்காது. இந்தப்பணியை தொடக்கம் முதலே சிறப்பா ஒருங்கிணைத்த அன்பகத்தின் பணியாளர்களுக்கும், இந்த நிகழ்ச்சியை தொடர்ந்து ஒளிபரப்பு செய்த கலைஞர் செய்திகளுக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். வெற்றி பெற்றவர்கள் உட்பட அனைவருக்கும் என் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.